**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

20256–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், தைத்திங்கள் 22 ம் நாள்

**இ.ம.எண். 325/2023**

**in**

**அ.வ.எண். 331/2015**

P.சிவக்குமார் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

கார்த்திகேய குருக்கள் .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 21.01.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சரவணக்குமார், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் தாவா/மனுவில் கண்டுள்ள சொத்துக்களை மனுதாரர் அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்/பிரதிவாதியோ அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யாமல் இருக்கும்படி மேற்படியார் பெயரில் இம்மனு முடிவடையும் வரையில் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும் அசல் வழக்கு முடிவடையும் வரையில்

இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்ககோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 & 2 மற்றும் பிரிவு 151ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

__1. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:—__

i) இம்மனுவின் மனுதாரர் எதிர்மனுதார்/பிரதிவாதி மீது தாவா வழக்கு சொத்துக்களில் மனுதாரர் உணவகம் மற்றும் தேநீர் கடை வைத்து தொழில் செய்து அனுபவித்து வருவதை எதிர்மனுதார்/பிரதிவாதியோ அவரது ஆட்களோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யக் கூடாதென்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கு சொத்துக்களான சர்வே 1622/1 மற்றும் 1622/3 நம்பர்களில் கண்டுள்ள சொத்துக்கள் அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கு நிலமாகும். தாவா சொத்துக்களில் மனுதாரரின் தகப்பனார் பழனிச்சாமி கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு ஆர்ஜிதம் செய்து தேநீர் கடை மற்றும் உணவகம் வைத்து தொழில் செய்து அனுபவித்து வந்துள்ளார்.

ii) மனுதாரரின் தகப்பனார் இறந்த பின்னிட்டு மனுதாரர் தாவா சொத்துக்களிலுள்ள தேநீர் கடை மற்றும் உணவகத்தை மேம்படுத்தி தொழில் செய்து அனுபவித்து வருகிறார். எதிர்வழக்குரையில் தாவா வழக்கு சொத்துக்களை அனுபவித்து வருவதை எதிர்மனுதார்/பிரதிவாதி ஒத்துக் கொண்டுள்ளார். மேலும் எதிர்மனுதார்/பிரதிவாதி தாவா வழக்கு 1 இலக்க சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் பொய்யான வாடகை ஒப்பந்தம் மற்றும் பாகப்பத்திரங்கள் மோசடியாக செய்து அவைகள் மூலம் சட்டத்திற்கு புறம்பான முறையில் ஆக்கிரமிப்பு செய்து தாவா வழக்கு சொத்துக்களிலிருந்து மனுதாரரை வெளியேற்ற எதிர்மனுதார்/பிரதிவாதி முயற்சித்து வருகிறார்.

iii) அவ்வாறு இருந்து வரும் நிலையில் தாவா வழக்கு 1 இலக்க சொத்திற்கு கிழபுறத்தில் உள்ள கட்டிடத்தை எதிர்மனுதார்/பிரதிவாதி தனது ஆட்களுடன் 06.02.2023 ம் தேதியில் இடித்துள்ளார்கள். மனுதாரர் தாவா வழக்கு சொத்துக்களை அனுபவித்து வருவதை எதிர்மனுதார்/பிரதிவாதி தடையோ, இடைஞ்சலோ ஆக்கிரமிப்பு செய்யவோ எவ்வித உரிமையும் எதிர்மனுதார்/பிரதிவாதிக்கு சட்டப்படி கிடையாது. எதிர்மனுதார்/பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் தாவா வழக்கு சொத்தில் வாதி தேநீர் மற்றும் உணவகம் என்ற பெயரில் உணவகம் வைத்து தொழில் செய்து வருகிறார் என்று கூறியுள்ளார். தாவா வழக்கு சொத்துக்கள் மனுதாரருடைய அனுபவத்தில் இருந்து வருவதை எதிர்மனுதார்/பிரதிவாதி ஒத்துக் கொண்டுள்ளார். அவ்வாறு இருக்கும் நிலையில் எதிர்மனுதார்/பிரதிவாதி தனது ஆட்களுடன் 07.03.2023 ம் தேதியில் மனுதாரருடைய அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்ய முற்பட்டதை மனுதாரர் தடுத்துவிட்டார்.

iv) தாவா/மனு சொத்துக்களை மனுதாரர் தேநீர் மற்றும் உணவகம் வைத்து தொழில் செய்து அனுபவித்து வருவதை எதிர்மனுதார்/பிரதிவாதியோ அவரது ஆட்களோ ஏஜெண்டுகளோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யாமல் இருக்கும்படி எதிர்மனுதாரர் பேரில் இம்மனு முடிவடையும் வரையில் தற்காலிக உறுத்துக் கட்டளை உத்திரவும் தாவா வழக்கு முடிவடையும் வரையில் இடைக்கால உறுத்துக் கட்டளை உத்திரவும் வழங்க வேண்டியது அவசியமாக உள்ளது. மனுதாரர் இடைக்கால உறுத்துக் கட்டளை பெற போதுமான Prima Facie Cases–ம் Balance of Convenyance–ம் மனுதாரர் பக்கம் நிறைய உள்ளது. எனவே தாவா/மனுவில் கண்டுள்ள சொத்துக்களை மனுதாரர் அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்/பிரதிவாதியோ அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யாமல் இருக்கும்படி மேற்படியார் பெயரில்

இம்மனு முடிவடையும் வரையில் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும் அசல் வழக்கு முடிவடையும் வரையில் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரரர் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :—</u>**

i) மனுதாரர் மனு பொய்யானது, மோசடியானது, சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. இவ்வெதிர்மனுதாரர் இந்த எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவராவார்.

ii) தாவா வழக்கு சொத்துக்களான சர்வே 1622/1 மற்றும் 1622/3 நம்பர்களில் கண்டுள்ள சொத்துக்களில் அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கு நிலம் என்பதும் தாவா வழக்கு சொத்துக்களில் மனுதாரரது தகப்பனார் பழனிச்சாமி கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்பு ஆர்ஜிதம் செய்து தேநீர் கடை மற்றும் உணவகம் வைத்து தொழில் செய்து அனுபவித்து வந்துள்ளார் என்பதும் அவைகளுக்கு மனுதாரரது தகப்பனார் அரசுக்கு செலுத்த வேண்டிய தொழில் வரி வகையறா செலுத்தி அனுபவித்து வந்துள்ளார் என்பதும் மனுதாரரது தகப்பனார் இறந்த பின்னிட்டு மனுதாரர் தாவா சொத்துக்களிலுள்ள தேநீர்கடை மற்றும் உணவகத்தை மேம்படுத்தி தொழில் செய்து அனுபவித்து வருகிறார் என்பதும் உண்மையல்ல.

iii) எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள விபரங்கள் மனுதாரரது வழக்கறிஞர் மூலம் மனுதாரருக்கு 10.01.2023 ம் தேதியில் தெரியவந்தது என்பதும் எதிர்வழக்குரையில் தாவா வழக்கு சொத்துக்களை

எதிர்மனுதாரர் அனுபவித்து வருவதை ஒத்துக்கொண்டுள்ளார் என்பதும் மேலும் எதிர்மனுதாரர் தாவா வழக்கு 1ம் இலக்க சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் பொய்யான வாடகை ஒப்பந்தம் மற்றும் பாகப்பத்திரங்கள் மோசடியாக உற்பத்தி செய்து அவைகள் மூலம் சட்டத்திற்கு புறம்பான முறையில் ஆக்கிரமிப்பு செய்து தாவா சொத்துக்களிலிருந்து மனுதாரரை வெளியேற்ற எதிர்மனுதாரர் முயற்சித்து வருகிறார் என்பதும் உண்மையல்ல. அவ்வாறு இருந்து வரும் நிலையில் தாவா 1வது அயிட்ட சொத்திற்கு கிழபுறத்தில் உள்ள கட்டிடத்தை எதிர்மனுதாரர் அவரது ஆட்களுடன் 06.02.2023 தேதியில் இடித்துள்ளார்கள் என்பதும் உண்மையல்ல.

iv) அதேபோல் தாவா வழக்கு சொத்துக்களை இடிக்க போவதாக எதிர்மனுதாரர் தனக்கு வேண்டியவர்களிடம் கூறியுள்ளார் என்பதும் அவர்களில் ஒருவர் மனுதாரரிடம் மேற்படி விபரத்தை கூறியுள்ளார் என்பதும் மனுதாரர் தாவா வழக்கு சொத்துக்களை அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர் தடையோ இடைஞ்சலோ ஆக்கிரமிப்பு செய்யவோ எவ்வித உரிமையும் எதிர்மனுதாரருக்கு கிடையாது என்பதும் உண்மையல்ல. மனுதாரர் இம்மனுவில் கூறும் காரணங்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாததால் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:–**

மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரரின் தகப்பனார் இறந்த பின்னிட்டு மனுதாரர் தாவா சொத்துக்களிலுள்ள தேநீர் கடை மற்றும் உணவகத்தை மேம்படுத்தி தொழில் செய்து அனுபவித்து வருகிறார் என்றும் எதிர்வழக்குரையில் தாவா வழக்கு சொத்துக்களை மனுதாரர் அனுபவித்து வருவதை எதிர்மனுதார்/பிரதிவாதி ஒத்துக் கொண்டுள்ளார் என்றும் மேலும் எதிர்மனுதார்/பிரதிவாதி தாவா வழக்கு 1 இலக்க சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் பொய்யான வாடகை ஒப்பந்தம் மற்றும் பாகப்பத்திரங்கள் மோசடியாக செய்து அவைகள் மூலம் சட்டத்திற்கு புறம்பான முறையில் ஆக்கிரமிப்பு செய்து தாவா வழக்கு சொத்துக்களிலிருந்து மனுதாரரை வெளியேற்ற எதிர்மனுதார்/பிரதிவாதி முயற்சித்து வருகிறார் என்றும் எனவே இம்மனு முடிவடையும் வரையில் தற்காலிக உறுத்துக் கட்டளை உத்திரவும் தாவா வழக்கு முடிவடையும் வரையில் இடைக்கால உறுத்துக் கட்டளை உத்திரவும் வழங்கி உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுதாரர் தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர் தடையோ இடைஞ்சலோ ஆக்கிரமிப்பு செய்ததாக கூறுவது உண்மையல்ல என்றும் மனுதாரர் இம்மனுவில் கூறும் காரணங்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாததால் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது முதலில் மனுதாரர்/வாதியால் தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது தாக்கல் செய்யப்பட்டு கடந்த 02.03.2016 அன்று பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினம் அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 27.01.2022 அன்று மனுதாரர்/வாதியால் தாவா சொத்தை சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் ஸ்தல பார்வை செய்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி இ.ம.எண்.137/2022 மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு கடந்த 16.07.2025 அன்று தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

7. பின்னிட்டு கடந்த 01.02.2023 அன்று மனுதாரர் தரப்பில் அசல் வழக்கை விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்யக்கோரி இ.ம.எண்.2/2023 (இ.ம.எண்.89/2023) என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு அம்மனு 20.06.2024 அன்று அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் அசல் வழக்கானது விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கடந்த 09.03.2023 அன்று இம்மனு முடிவடையும் வரையில் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடிவடையும் வரையில் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து அசல் வழக்கானது மனுதாரரால் முதலில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு பின்னிட்டு தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் தாவா சொத்துக்கள் அரசுக்கு பாத்தியப்பட்ட நத்தம் புறம்போக்கு நிலம் என்றும் அதை மனுதாரரரின் தகப்பனார் 60 ஆண்டுகளுக்கு முன்பு ஆர்ஜிதம் செய்து அதில் தேநீர் கடை, உணவகம் நடத்தி வந்ததன் அடிப்படையில் மனுதாரருக்கு பாத்தியப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும் மனுதாரருக்கு தாவா சொத்தில் உணவகம் நடத்த வாடகை ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தி 3 வருட காலக்கெடுவிற்கு கொடுத்ததாகவும் பின்னிட்டு காலக்கெடு முடிந்த பின்பு மனுதாரர் காலி செய்ய மறுத்து இவ்வழக்கை தாக்கல் செய்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது.

9. மனுதாரர் தரப்பில் தாவா வழக்கு சொத்துக்கள் தற்போது மனுதாரருடைய அனுபவத்தில் இருந்து வருவதை எதிர்மனுதார்/பிரதிவாதி ஒத்துக் கொண்டு தனது ஆட்களுடன் 07.03.2023 ம் தேதியில் மனுதாரருடைய அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்ய முற்பட்டார் என்றும் அதனால் தாவா/மனு சொத்துக்களை மனுதாரர் தேநீர் மற்றும் உணவகம் வைத்து தொழில் செய்து அனுபவித்து வருவதை எதிர்மனுதார்/பிரதிவாதியோ அவரது ஆட்களோ ஏஜெண்டுகளோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யாமல் இருக்கும்படி எதிர்மனுதாரர் பேரில் இம்மனு முடிவடையும் வரையில் தற்காலிக உறுத்துக் கட்டளை உத்திரவும் தாவா வழக்கு முடிவடையும் வரையில் இடைக்கால உறுத்துக் கட்டளை உத்திரவும் வழங்க வேண்டும் என்று சொல்லப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சொல்லி இந்த மனுவை தாக்கல்

செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மறுக்கப்பட்டுள்ளது.

10. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆவணமாக பழனிச்சாமி பிள்ளை என்பவர் பெயரிலான தொழில்வரி ரசீதுகளும், ம.சா.ஆ.2 ஆவணமாக மனுதாரரின் பிறப்பிட சான்றிதழும், ம.சா.ஆ.3 ஆவணமாக காங்கயம் பஞ்சாயத்து ஆணையரால் வழங்கப்பட்ட அறிவிப்பும், ம.சா.ஆ.4 மற்றும் ம.சா..ஆ.5 ஆவணங்களாக பதிவு சான்றிதழும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது தாவா சொத்தை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வாடகைக்கு கொடுத்ததாகவும் வாடகை ஒப்பந்த காலம் முடிந்தும் தாவா சொத்தை காலி செய்ய மறுத்து மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. இதன்மூலம் தாவா சொத்து தற்போது மனுதாரர் அனுபவத்தில் இருந்து வந்தது என்ற சங்கதியானது பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

11. கடந்த 06.02.2023 தேதியில் 1ம் அயிட்ட சொத்திற்கு கிழபுறமுள்ள கட்டிடத்தை எதிர்மனுதாரர் இடித்ததாகவும் 07.03.2023 தேதியில் வாதியின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்ய முற்பட்டதாகவும் சொல்லியுள்ள நிலையில் அதைப் பொறுத்து மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணங்களும் சாட்சியங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.அசல் வழக்கானது 2015ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வரும் நிலையில் மனுதாரரின் மனுக்களின் பேரில் அசல் வழக்குரை திருத்தப்பட்டும், 2 முதல் 5 பிரதிவாதிகள் கட்சி சேர்க்கப்பட்டும், தற்போது அசல் வழக்கானது மனுதாரர் அசல் வழக்குரையில் திருத்தல் கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் காரணமாக நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள்

என்று எதிர்மனுதாரர் தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்துக்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதா என்பதைப் பொறுத்தும் தாவா சொத்துக்களில் மனுதாரர் சட்டப்படியாக அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்து வருகிறாரா என்பதைப் பொறுத்தும் அசல் வழக்கில் இருதரப்பு சாட்சிகளின் முழுமையான விசாரணைக்கு பின்னிட்டு இறுதியாக தான் தீர்மானிக்க இயலுமே தவிர இம்மனுவில் அது குறித்து தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் அசல் வழக்கானது மனுதாரரால் தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று எதிர்மனுதாரர் தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்துக்கள் மனுதாரருக்கு பாத்தியப்பட்டதா என்பதைப் பொறுத்தும் தாவா சொத்துக்களில் மனுதாரர் சட்டப்படியாக அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்து வருகிறாரா என்பதைப் பொறுத்தும் அசல் வழக்கில் இருதரப்பு சாட்சிகளின் முழுமையான விசாரணைக்கு பின்னிட்டு இறுதியாக தான் தீர்மானிக்க இயலும் என்பதாலும் மேற்படி சங்கதிகளைக் குறித்து இம்மனுவில் தீர்மானிக்க இயலாது என்பதாலும் 2015 ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வரும் அசல் வழக்கில் மனுதாரர் தரப்பு விசாரணை துவக்காமல் மேற்கொண்டு காலதாமதத்தை ஏற்படுத்தவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மேலேகண்ட பரிசீலனைகளின் அடிப்படையிலும் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2026.02.05 19:08:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** :– இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :–

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | வீட்டுவரி ரசீதுகள் (2–எண்ணிக்கை) |
| ம.சா.ஆ.2 | 27.09.2025 | தேதியிட்ட பிறப்பிட சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 06.05.1999 | லைசென்ஸ் பெற்றுக்கொள்ள அல்லது லைசென்சை புதுப்பித்துக்கொள்ள தவறிப்போனதற்கான பிராது தொடர்வதை பற்றி நோட்டீஸ் அசல் |
| ம.சா.ஆ.4 | 14.07.2012 | தேதியிட்ட பதிவுச் சான்றிதழ் அசல் |
| ம.சா.ஆ.5 | 23.04.2015 | தேதியிட்ட பதிவுச் சான்றிதழ் சான்றிட்ட நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : – இல்லை

K S MALATHI Digitally signed by K S MALATHI Date: 2026.02.05 19:08:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.